உதவிப் பொறியாளர் நிலையில் தகுதிவாய்ந்த அலுவலர்களை தேர்ந்தெடுத்து 2008–09ம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல்.

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (ப.அ.3) துறை

அரசாணை (டி) எண். 308 | நாள் 12.05.2008

படிக்கப்பட்டவை

1 அரசாணை (1டி) எண். 244, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ.1) துறை நாள் 21.4.2008.

2 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பு நாள் 22.4.2008. (MP (MD) No.3/2008 in WP (MD) No. 3718/2008)

3 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண். 88983/இஇ1 நாள் 28.4.2008.

4 சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு நாள் 30.4.2008. (MP. No.1 / 2008 in WP No. 10951/2008).

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2008–09ம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் காலிப்பணியிட மதிப்பீடு 33 என நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் 2008–09ம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடும் பொருட்டு 55 நபர்களின் பெயர்கள் அடங்கிய முன்மொழிவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. கட்டிடமையத்தில் பணியாற்றும் 13 திட்டப் பொறியாளர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையிலிருந்து தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவிப் பொறியாளராக பணியாற்றும் திரு ஆர். பாலாஜி ஆகியோர்கள் முறையே சென்னை உயர்நீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் தொடர்ந்த வழக்குகளின் மீது படிக்கப்பட்ட 4 மற்றும் 2ல் உள்ள நீதிமன்ற தீர்ப்புகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 13 மற்றும் 1 (மொத்தம்–14) உதவி செயற்பொறியாளர் பணியிடங்களை காலியாக வைத்திருக்கும்படி ஆணையிடப்பட்டுள்ளன.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவினை மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில், விதி 4–ன் கீழ் ஆய்வு செய்து 2008–09ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்ட 33 உதவி செயற்பொறியாளர் பணியிடங்களில் 19 உதவி செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கும்பொருட்டு கீழ்க்காணும் நீதிப்பேராணைகளின் இறுதி தீர்ப்புகளுக்கு உட்பட்டு கீழ்க்கண்ட தேர்ந்தோர் பட்டியலினை அரசு வெளியிடுகிறது.

i) Writ Petition No. 24453/2004
ii) Writ Petition No. 28434/2004
iii) Writ Petition No.29715/2004
iv) Writ Petition No. 31619/2004
v) Writ Petition No. 32897/2004
vi) Writ Petition No. 654/2007
vii) M.P.No. 1/08 in W.P.No. 10951/08
viii) M.P.No. 3/08 in W.P (MD) No.3718/08

| வ.எண் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பணிமூப்பு பட்டியல் எண் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய பணிமூப்பு எண் | பெயர் திருவாளர்கள் / திருமதி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 113 | 175 | டி. கௌசல்யா |
| 2 | 169 | 200 ஏ 49 | பி குமுதா |
| 3 | 170 | 200 ஏ 50 | எம். மாடசாமி சுந்தர்ராஜ் |
| 4 | 171 | 200 ஏ 52 | ப்பி. ஸ்ரீவெங்கடேசன் |
| 5 | 172 | 200 ஏ 54 | கே.கே. பாபு |
| 6 | 173 | 200 ஏ 55 | கே. சக்திவேல் |
| 7 | 174 | 200 ஏ 56 | கே. கணேஷ்சங்கர் |
| 8 | 175 | 200 ஏ 58 | எம். பேபி |
| 9 | 176 | 200 ஏ 59 | ட்டி. அருள் |
| 10 | 177 | 200 ஏ 60 | எஸ். ரவிச்சந்திரன் |
| 11 | 178 | 200 ஏ 61 | கே. பாஸ்கர் |
| 12 | 180 | 200 ஏ 63 | ப்பி. அனிதா |
| 13 | 181 | 200 ஏ 64 | எஸ். செந்தில்குமார் |
| 14 | 182 | 200 ஏ 65 | ஜே. தமிழரசி |
| 15 | 183 | 200 ஏ 67 | எஸ். விக்டர்அமிர்தராஜ் |
| 16 | 185 | 200 ஏ 71 | கே. ஜெயராஜ் |
| 17 | 187 | 200 ஏ 73 | ப்பி. கர்ணன் |
| 18 | 188 | 200 ஏ 74 | ஏ. மொகிதீன் பாத்திமா |
| 19 | 189 | 200 ஏ 75 | ப்பி. சிவசங்கரன் |

எஞ்சிய 14 பணியிடங்களுக்கு படிக்கப்பட்ட 4 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்ட நீதிப்பேராணை வழக்குகளின் மீது உயர்நீதிமன்றங்களின் இறுதிப் தீர்ப்பு கிடைக்கப்பெற்றபின், அதன் அடிப்படையில் தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்படும்.

5. மேலே பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு தேர்ந்தோர் பட்டியலின் அடிப்படையில், உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட உதவிப்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் பணியிடத்தில் காலிப்பணியிடங்கள் இல்லாத நிலையில், எவ்வித முன்அறிவிப்பும் இன்றி உதவிப்பொறியாளர்களாக பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்